


கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று, சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழகத்தில் இணைந்த அ.தி.மு.க.வினர் குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சி! உடன் கழக முன்னணியினர் உள்ளனர்.



கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (06.06.2026) சென்னை நீலாங்கரை ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி. செல்வராஜ் – ரமணி இணையரின் மகன்வழிப் பேரனும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். ரவி திருமதி ஆர். கீதா இணையரின் மகனுமான ஆர்.ஜி.அபிஷேக்– செங்கல்பட்டு மாவட்டம் – கருங்குழி டி.ஆர்.எஸ். சசிகுமார் திருமதி எஸ். புஷ்பராணி இணையரின் மகள் எஸ். கீர்த்தனா திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### எந்தவித கட்டுப்பாடு - முறையான கண்காணிப்பு - கணக்கெடுப்பு இல்லாமல்

# திருப்பூருக்கு ரயிலில் தினமும் ஆயிரக்கணக்கான வடமாநில தொழிலாளர்கள் வருகை!

## தொழில் நகரின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல்!

திருப்பூர், ஜூன் 8–

எந்தவித கட்டுப்பாடும் முறையான கண்காணிப்பும் முறையான கணக்கெடுப்பு இல்லாமல் திருப்பூருக்கு ரயிலில் தினமும் ஆயிரக்கணக்கான வடமாநில தொழிலாளர்கள் வருகையால் பொதுமக்களிடையே ஒரு விதமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது, இது தொழில் நகரின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்த லாக மாறியுள்ளது. இதனால் குற்ற சம்பவங்கள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் பொதுமக்கள் கலக்கத்தில் உள்ளனர்.

தொழில் நகரமான திருப்பூரின் பின்னலாடை மற்றும் அது சார்ந்த தொழில்களை நம்பி, தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும், வட மாநிலங்களில் இருந்தும் தினமும் ஆயிரக்கணக் கான தொழிலாளர்கள் வந்த வண்ணம் உள்ளனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாழ் வாதாரத்திற்காக வரும் தொழிலாளர்களின் புகலிடமாக திருப்பூர் விளங்கி வருகிறது. ஆனால், சமீப காலமாக எந்தவித கட்டுப்பாடும், முறையான கண்காணிப்பும், முறையான கணக்கெடுப்பு இல்லாமல் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நகருக்குள் வருவது பொதுமக்களிடையே ஒரு விதமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு வரும் தொழிலாளர்களை பற்றிய முறையான புள்ளி விவரங்களோ அல்லது கணக்கெடுப்போ அரசிடமோ, மாவட்ட நிர்வாகத்திடமோ அல்லது காவல் துறையிடமோ இல்லை. வட மாநிலங்களில் இருந்து ரயில்கள் மூலம் தினமும் ஆயிரக்கணக்கானோர் திருப்பூரில் இறங்குகின்றனர். அவர்கள் யார்?, அவர்களின் பின்னணி என்ன?, சொந்த ஊரில் ஏதேனும் குற்றப் பின்னணி உள்ளதா?, என்பது போன்ற எந்தவொரு அடிப்படைத் தகவலும் உள்ளூர் நிர்வாகத்திற்குத் தெரிவதில்லை. இது தொழில் நகரின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

குறிப்பாக, கடந்த பிப்ரவரி மாதம் டெல்லியில் பாதுகாப்பு படையினருக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் தொடர்பான வழக்கில், டெல்லி தனிப்படை போலீசார் திருப்பூரில் முகாமிட்டு அதிரடி வேட்டை நடத்தினர். இதில், போலி ஆவணங்கள் மூலம் திருப்பூரில் தங்கியிருந்த மிஜானுர் ரஹ்மான், முகமது சபத், உமர் உள்ளிட்ட 6 வங்கதேச தொழிலாளர்களை டெல்லி போலீசார் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதற்கு முன்பாக, கடந்த ஆண்டும் வட மாநில தொழிலாளர்கள் என்ற போர்வையில் திருப்பூரில் சட்டவிரோதமாக பணிபுரிந்து வந்த 25 வங்கதேச வாலிபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்தது குறிப்பிடத்தக்கது. முறையான கணக்கெடுப்பு இல்லாததால் சர்வதேச ஊடுருவல்காரர்கள் கூட திருப்பூரில் எளிதாக தங்கி விட முடிகிறது. இது மட்டுமன்றி திருப்பூரில் ஆங்காங்கே அரங்கேறும் குற்றங்கள் பொதுமக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. இரண்டு நாட்களுக்கு முன்பு திருப்பூர் கோல்டன் நகரில் குடும்பத் தகராறில் மனைவியை கொடூரமாக கொன்ற பீகார் மாநிலத்தை சேர்ந்த தொழிலாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பிப்ரவரி மாதம், காதலிக்க மறுத்த பெண்ணின் கழுத்தை அறுத்து கொலை செய்ய முயன்ற ஒடிசா மாநில வாலிபரின் வெறிச்செயலும், பல்லடத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து கஞ்சா சாக்லேட்களுடன் பீகார் வாலிபர் கைது செய்யப்பட்டதும், கடந்த ஜனவரி மாதம் சுமார் 400 கிலோ தடை செய்யப்பட்ட குட்கா, புகையிலை பொருட்களுடன் வட மாநில வாலிபர்கள் சிக்கியதும் என அடுக்கடுக்கான சம்பவங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.

ஒரு குற்றச்சம்பவம் நடந்த பிறகு. அதில் தொடர்புடைய வெளி மாநில அல்லது வெளி மாவட்ட நபர்களை கண்டறிவது காவல்துறைக்கு சவாலாக உள்ளது. அவர்கள் தங்கியிருக்கும் தற்காலிக முகவரிகளோ, முறையான அடையாள அட்டைகளோ இல்லாததால், குற்றவாளிகள் மிக எளிதாக தப்பிச்சென்று விடுகின்றனர். இது உள்ளூர் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்து வருகிறதது.

திருப்பூரின் தொழில் வளர்ச்சிக்கும். உற்பத்திக்கும் தொழிலாளர்களின் வருகை அவசியம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், அது சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் அமைந்து விடக்கூடாது. திருப்பூருக்கு வரும் தொழிலாளர்களின் கணக்கெடுப்பை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், ”நாளுக்கு நாள் வளரும் திருப்பூர் தொழில் வளர்ச்சிக்கு வட மாநிலம் உட்பட புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பு அவசியமானது. ஆனால், அவர்களின் விவரங்களை கொண்டிருப்பதும் முக்கியமானது. மாவட்ட நிர்வாகம், தொழிலாளர் நலத்துறை, காவல் துறையும் உடனடியாக ஒருங்கிணைந்து, திருப்பூரில் தங்கியுள்ள அனைத்து வெளிமாநில மற்றும் வெளி மாவட்ட தொழிலாளர்களின் விவரங்களை சேகரிக்க சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும். நிறுவன உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களை தங்க வைக்கும் வீட்டு உரிமையாளர்கள் ஆதார் அட்டை உள்ளிட்ட அசல் அடையாள சான்றுகளை காவல் துறையின் பிரத்யேக செயலியில் பதிவேற்றம் செய்வதை கட்டாயமாக்க வேண்டும். இதன் மூலம் அனைத்து தரப்பினரும் காவல்துறையின் கண்காணிப்பில் இருக்கிறோம். தவறு செய்தால் எளிதில் தப்பி விட முடியாது என்ற எண்ணத்திற்கு வருவார்கள். இதனால், தவறுகள் குறையும், தவறுகள் நடந்தால் உடனடியாக கைது நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ள முடியும் என்றனர்.





சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் – புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு ”புத்தெழுச்சி4, ”என்றும் நாங்களே உங்கள் கரங்கள்! காலம் சொல்லும் கலைஞரின் அறங்கள் எனும் தலைப்பில், மாபெரும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா, சென்னை, பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளரும் மண்டலக் குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு தலைமையில், மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் 900 தூய்மை பணியாளர்களுக்கு தலா.5 கிலோ அரிசி, எண்ணெய் மற்றும் மளிகை பொருட்கள், பேண்ட், சட்டை, புடவை தொகுப்பும், உதவித் தொகையையும் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; “5.6.2026 அன்று நடத்தப் பட்ட தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில், 75 நிமிடங்களில், 436 திட்டங்களை விரிவாகவும் விரைவாகவும் அலசி ஆராய்ந்தார் முதல்வர் விஜய்” என்று நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளனவே ?

**பட்டணம் :** ஆமாமய்யா; இதைத்தான் வாயு வேகம், மனோ வேகம் என்றும்;

எண்ணங்கள் குதிரைகள் ஆனால், எண்ணிய நேரத்தில் காத தூரம் பறக்கலாம் என்றும்; சொல்லி வைத்திருப்பார்களோ!

நடந்தது என்ன மந்திரி சபைக் கூட்டமா இல்லை மாயா பஜார் காட்சியா ?



தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவேற்காடு நகரம் அயனம்பாக்கத்தில் மாபெரும் கால்பந்து போட்டி மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே.பவுல் ஏற்பாட்டில் நகரக் கழக செயலாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சருமான ஆவடி சாமு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இறுதிப் போட்டியை தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மாபெரும் கோப்பை மற்றும் பரிசு பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், கழக நிர்வாகிகள் ம.விநாயகம், டி.தெய்வசிகாமணி, பிரதானம், ஐ.ஜேக்கப், செல்லதுரை, விஜய் சாரதி, அப்பு(எ)ஜெபராஜ், ஆ.நாராயணன், நரேஷ் குமார், உள்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

